Gang Mazdoors

* 17 Q.—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government received any representations requesting to make the workers who are involved in the work of road maintenance for many years drawing daily wages permanent; and

(b) if so, the steps taken thereon ?

தினக்கூலி பெறும் தொழிலாளர்கள்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாலே பராமரிப்புத் தொழிலில் ஈடுபட்டு பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிற தினக்கூலி பெறுகிற தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் முறையீடுகள் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் மீது மேற்கொண்ட நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ): ஆம். பத்து ஆண்டுகட்கு மேல் பணிபுரிந்து நெடுஞ்சாலேக் கிராமப் பணித் துறையைச் சேர்ந்த காங் கூலிகளே நிரந்தரப்பணி உரிமை பெறும் தொகுதியின் கீழ் 1--4--1973 முதல் கொண்டு வர 26--6--73 தேதிய அரசு பொதுப்பணித் துறை ஆணை (பலவகை) எண் 1032-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. காட்டூர் கோபால்: தலேவரவர்களே, இதே போன்று ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகின்ற ஊழியர்களும் நிரந்தரம் செய்யப்படுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலேவரவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

Opening of an Aerodrome near Salem or Ulundurpet

* 18 Q.—THIRUVALARGAL P. THIRUGNANASAMBANDAM AND V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Central Government have elicited our views with regard to the opening of an Aerodrome near Salem or Ulundurpet; and

(b) if so, the details thereof?

சேலம் அல்லது உளுந்தூர்ப்பேட்டைக்கருகில் விமான நிலையம்

திரு. பி. திருஞானசம்பந்தம் & திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலத்திலாவது, உளுந்தூர்பேட்டைக்கு அருகிலாவது விமான நிலையம் ஒன்று அமைக்க மத்திய சர்க்கார் நமது அரசின் ஆலோசனையைக் கோரியுள்ளதா ?

(இ) ஆமெனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை. சேலத்தில் தற்போது விமான தளம் அமைக்க இயலாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் விமான நிலையம் அமைப்பது பற்றி எவ்விதத் தகவலும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, திருநெல்வேலிக்கு அருகாமையிலுள்ள கயத்தாரில் ஒரு விமான நிலையம் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதுபற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அங்கே விமான நிலையம் அமைப்பதுபற்றி எந்தத் தகவலும் இல்லை.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, சென்ற மகாயுத்தத்தின் போது கயத்தாருக்கு அருகில் ஒரு விமான நிலையம் ஏற்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது. அப்படி அங்கு ஏற்படுத்துவதாக இருந்தால், அரசிடம் அதுபற்றி ஏதாவது குறிப்பு இருக்கிறதா என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தூத்துக்குடி தொழிற்சாலையை ஒட்டி, அங்கே ஒரு விமான தளம் அமைப்பது நல்லது என்று இந்த அரசின் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி மத்திய அரசு முடிவு எடுத்ததாகத் தெரியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, ஓடிக்கொண்டிருக்கும் விமானங்கள் கூட சரியாக ஓடுவதில்லை என்று பத்திரிகையில் பார்த்தேன். அது பற்றி அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது போல நானும் பத்திரிகையில் படித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விமானம் ஓடுவதில்லை, பறக்கிறது.